[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 செப்டம்பர் 14

இவ்வணைப் பகுதி மத்திய அரசின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் அமைச்சகத்தால் சுற்றுச்சூழல்ரீதியாக பாதுகாக்கப்பட்ட பகுதியென அறிவிக்கப்பட்டுள்ளது. அணையைத் தூர் வார, தேவையான சுரங்கத் திட்ட அறிக்கை (Mining Plan) தயாரிக்கப்பட்டு, உரிய அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், தூர் வாருவதற்கு வாகனங்கள் அணைக்குள் செல்லும் வழித்தடங்கள் காப்புக் காடுகள் வழியே செல்வதால், வனத் துறையின் அனுமதி பெறும்பொருட்டு, மத்திய சுற்றுச்சூழல் வனப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் அமைச்சகத்திடம் ஏப்ரல் 2015-ல் அனுமதி கோரப்பட்டு, அதுவும் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசின் சுற்றுச்சூழல் வனப் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் அமைச்சகத்திடம் உரிய அனுமதி பெறப்பட்டவுடன், பரப்பலாறு அணையில் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரத்து வாய்க்கால்களில் கான்கிரீட் தளங்கள் அமைக்கப்படுமா என்று கேட்டார். தற்போது வருகின்ற நீரின் அளவைத் தாங்கக்கூடிய அளவிற்கு, தேவையான இடங்களில் பக்கவாட்டுச் சுவர்கள் மிக உறுதியாக அங்கே உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, தற்போது அந்த நிலை எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்தில் தேவைப்படின், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கைகள் அளித்தல்

சட்டவிதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.

***திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகிலத்தின் காலநிலைகள் மாறினாலும், கழகத்

2015 செப்டம்பர் 14] [திரு. ஞா. செந்தமிழன்]

தொண்டர்கள்மீதும், தமிழக மக்களின்மீதும் மாறாத அன்பு கொண்ட அம்மா! காற்றில் கை வைக்க கைகோர்த்த கட்சிகள் இருந்தாலும், கானல் நீராக, காளான்கள்போல் பல கட்சிகள் இருந்தாலும், பால், இனம் வைத்து பிழைப்பு நடத்த சில கட்சிகள் முயன்றாலும், அசைக்க முடியாத எஃகு கோட்டையாக, கழகத்தைக் காத்திடும் காவல் தெய்வம் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) சித்தமெல்லாம் ஏழைகளை சிந்தையிலே சுமந்து, நித்தம் நித்தம் நிலாச் சோறு ஊட்டுகின்ற தருமத்தின் சொரூபமே! கடலாக விரிந்த புகழே! கருணை கொண்டு பொழியும் சிரபுஞ்சி மழையே!

கடந்த 9, 10 ஆகிய தேதிகளில் உலகத் தொழில் முதலீட்டாளர்கள் சந்திப்பினை நடத்தி, இலக்கு ஒரு இலட்சம் கோடி என நிர்ணயித்து, அம்மா! உங்கள் சிந்தனையால், ஆற்றலால், கடந்த 20 ஆண்டுக் கால முதலீடுகளை ஒரே நாளில் ஈர்த்து, (மேசையைத் தட்டும்

ஒலி) அம்மா! கடந்த 20 ஆண்டுக் கால முதலீடுகளை ஒரே நாளில் ஈர்த்து, உங்கள் விழி அசைவால், விரல் அசைவில், 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளைத் தமிழகத்தில் குவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) சுமார் 5 இலட்சம் பேர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை உருவாக்கிட 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, வருகின்ற 2017 ஆம் ஆண்டிலும் அடுத்த தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டினை நடத்திட அறிவித்த அம்மா! உங்கள் தொலைநோக்குப் பார்வையில் தமிழகத்தில் தொழில்வளம் பெருகும். யுகங்கள் மாறினாலும், யுத்திகள் மாறினாலும், உங்கள் புகழ் என்றும் நிலைபெறும். அம்மா நீங்கள் நிலையான வானம். காலமும், மொழியும் உள்ளவரை உங்கள் புகழ் உயரும், உயரும், உயரும். மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 14 முதல் 17 வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.